# விஞ்ஞானம் மற்றும் சந்தியாவந்தனம் - ப்ரகலாதா

நான் ஒரு விஞ்ஞானி அதுவும் ஒரு விமான சம்பந்தபட்ட விஞ்ஞானி எனவே, நான் வாழ்க்கையை சுற்றுபுரம், இயற்கை, மனிதர்கள், கலாசாரம், பழக்கவழக்கங்கள், சடங்குகள், செய்முறை, வாழ்க்கை முறை முதலியவற்றை விஞ்ஞான ரீதியாகவே பார்க்கிறேன். துரதஷ்டவசமாக நம் நாட்டில் நம்முடைய எல்லாவிதமான அறிவும் விஞ்ஞானமும் படிப்பும், பேச்சும், இலக்கியமும் மேலை நாட்டு பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நமது இந்தியாவின் விஞ்ஞானம், மருத்துவம், உலோக சம்மந்தபட்ட விஷயங்கள், கணிதம் வான சாஸ்திரம் பொறியியல் விமான சம்மந்தப்பட்ட விஷயங்கள் பெரும்பாலும் அழிந்து விட்டன. மேலும் சொல்லபடுவது என்னவெனில் வடமேற்கு இருந்தும், கடல் மூலமாகவும் நம் நாட்டுக்கு படையெடுத்தவர்கள் நமது புராதண விஞ்ஞான அறிவு, இலக்கியம், கல்வெட்டுக்கள் முதலியவற்றை கொள்ளையடித்து சென்று விட்டனர். அதுவுமின்றி அவர்களுடைய நடைமுறை, பழக்கவழக்கங்களை இங்கேயே விட்டு விட்டு நம் நாட்டையே இருளில் மூழ்கடித்து விட்டனர்.

## ஆதிமூல விஞ்ஞான வேதாந்திகள்:-

அறிஞர்கள் மற்றும் சமய பெரியோர்கள் மூலமாக, சில விஞ்ஞான விஷயங்கள் நம்முடைய நம்பிக்கை காரணமாக நம்மிடையே நம் வாழ்க்கையில் இருந்து விட்டன. காலபோக்கில் சில மாற்றங்கள், வேறு மாதிரியான அர்த்தங்கள், விஞ்ஞான ரீதியாக காரணம் தெரியப்படாமலிருந்ததாலும் நம்முடைய பெரியோர்கள் மூலமாக சரியான விளக்கங்கள் கொடுக்க படாமலிருந்தாலும் இந்த விஷயங்கள் எல்லாம் ஒரு சடங்காகவே இருந்து விட்டன.

## புத்திசாலிதனமான இளைய சமுதாயம்

பழைய காலத்தில் சிறியோர்கள் பெரிய புத்திசாலிகளாக இல்லாவிட்டாலும், பெரியவர்கள் மற்றும் தமது குருவிடம் ரொம்பவும் பணிவுடன்

இருந்தார்கள். அதனால் பெரியவர்கள் எந்த ஒரு விஷயத்திற்கும் காரணம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அப்படியே ஏற்பட்டாலும் சிறியவர்களை அதட்டி மிரட்டி தங்களுக்கு வேண்டியதை நிறைவேற்றி கொண்டார்கள். சிறியவர்களும் மறுபேச்சின்றி தமக்கு கொடுத்த காரியத்தை செய்து முடித்தார்கள்.

ஆனால் இன்றைய இளைய சமுதாயம் அறிவுத்திறனில் ரொம்பவும் புத்திசாலிகள் அவர்களுக்கு தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் தெரிந்தாக வேண்டும். அதுவுமின்றி அந்த காரியத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும் இவை இரண்டில் எது இல்லாவிட்டாலும் அதனை அறவே ஒதுக்கி விடுகிறார்கள்.

**<u>வேகமான உலகம்</u>**

புராதன அறிவுத்திறன் மற்றும் செய்முறைகள் ஒரு சாதாரன மனிதனுக்கு கொடுக்கப்பட்ட போது இந்த உலகம் அவ்வளவு வேகமானதாக இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எந்தஒரு விஷயத்திற்கும் வேகம் வேண்டியிருக்கவில்லை. அதனால் தான் சில சடங்குகள் திருமணங்கள் நாட்கணக்கில் நடந்து கொண்டு இருந்தன. சில மருத்துவ சிகிச்சைகள் கூட மாத கணக்கில் நடந்து கொண்டு இருந்தன. ஆனால் இன்று யாரிடம் நேரம் உள்ளது. எல்லா காரியங்களும் உடனுக்குடன் நடக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. எல்லாவற்றிலும் ஒரு வேகம் எந்தவிதமான விஞ்ஞான முக்கியத்துவமும் அழியாமல் எல்லா காரியங்களும் குறுகிய கால கட்டத்தில் நடக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. விங்ஞான முக்கியத்துவம் மற்றும் அதன் காரணங்களையே புரிந்து கொள்ளாமல் இந்த விஷயங்களை எப்படி பின்பற்ற முடியும்? அதனால் தான் நாம் செய்யும் பல காரியங்களின் காரணம் தெரியாத சூழ்நிலையில் நம் இளைய சமுதாயமே குழப்பத்தில் சூழந்துள்ளது.

**<u>சந்தியாவந்தனம்</u>**

நம்மை போன்ற மத்வ மதத்தினர் சந்தியாவந்தனத்தினை மிகுந்த சிரத்தையுடன் கண்டிப்பாக செய்ய வேண்டும். ஒரு பிராமணர் சந்தியாவந்தனம்

செய்வதை கவனித்தால் அவரிடம் நாம் பார்க்க கூடியது எல்லாம் சில அசைவுகளை தான். அவர் ஏதோ ஒரு இயந்திரம் போல சில சடங்குகளை செய்வது, வாயில் ஏதோ மந்திரங்களை முனுமுனுப்பது தவிர அவரது மனது மட்டும் தன் அலுவலகம், குழந்தைகள், அரசியில் அல்லது வேறு ஏதோ விஷயங்கள் குறித்தே நினைத்துக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையை பார்க்கும் இளைஞர்கள் எப்படி இந்த விஷயத்தில் உற்சாகம் அடைய முடியும்? இப்படியிருக்கும் நிலையில் நம்முடைய முன்னோர் நமக்கு தந்துள்ள புனிதமான சந்தியாவந்தனத்தின் பலனை எவ்வாறு நாம் அடைய முடியும்? நாம் கூறும் இந்த சந்தியாவந்தனத்திற்கு ஏதாவது விஞ்ஞான ரீதியான காரணங்கள் உண்டா? அப்படி இருக்குமேயானால் ஏன் நாம் இந்நாள் வரை அதைப்பற்றி நம்முடைய இளைய சமுதாயத்திற்கு அவர்கள் புரிந்து கொள்ளும் முறையில் தெரிய படுத்தவில்லை?

**<u>யோகக்கலையின் ரகசியம்</u>**

நம் முன்னோர்கள் தந்த யோகக்கலையின் ரகசியத்தை பற்றி பல பெரியவர்கள் தங்களால் முடிந்த அளவு பிறருக்கு புரிய வைத்துள்ளார்கள். இந்த புனிதமான கலையை எல்லோருக்கும் புரிய வைத்து அதனால் கிட்டும் பலனை எல்லோரும் அனுபவிக்க செய்வது மிகவும் அவசியம்.

**<u>விஞ்ஞானமும் சந்தியாவந்தனமும்</u>**

நமது உடல் அசைவுகள் மொத்தம் நம் உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் ரத்தம் ஓட்டம் இருப்பதன் மூலம் தான் ஆதாரப்பட்டுள்ளது. நம் உடல் உறுப்புகளான கண்கள், மூக்கு, சர்மம், வயிறு, இருதயம், மூளை மற்றும் எல்லா உறுப்புகளும் இரத்த ஓட்டத்தின் மீது தான் ஆதாரப்பட்டு உள்ளன. இரத்தமானது நாம் உண்ணும் உணவிலிருந்து தகுந்த அளவு சக்தியை எடுத்து கொள்வதுடன் தண்ணீர் மற்றும் காற்று இவைகளிடமிருந்தும் வேண்டிய சக்தியை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு உறுப்புகளுக்கும் விடாமல் கொடுப்பது அவ்வப்போது உறுப்புகள் சேதமடைந்தால் அவைகளை சரிபடுத்துவது மற்றும் எல்லா உறுப்புகளும் சரிவர இயங்க உறுதுணையாக இருப்பது போன்ற காரியங்களை செய்கிறது.

மேற்கூறிய இந்த செய்கையானது தானாகவே நம்மை அறியாமல் எப்போதம் நடந்து கொண்டு இருக்கும் விஷயம். அந்த செய்கைகளையே நமது நம் முன்னோர்கள் இன்னும் சரிவர செய்ய வைத்து அதனால் கிடைக்கும் பலனை பலமுறை அதிகரிக்கச் செய்யும்விதம் தான் சந்தியாவந்தனம்.

சந்தியாவந்தனம் என்பது அது செய்யும் முறை மூலமாக நமது மனதை ஊக்குவித்து நமது கை, கைவிரல்கள் மூலம் காற்றை சரிவர சீர்படுத்திஸ்வாசம் மூலமாக உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் எடுத்துச் சென்று அவற்றிக்கு சக்தியை கொடுக்க வைக்கிறது. இதன் மூலம் நம் உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் வேண்டிய ரத்த ஓட்டம், ப்ராணவாயு, முதலியவற்றை நரம்புகள் மூலமாக கிடைக்கச் செய்து அவற்றிக்கு வேண்டிய பூரண சக்தியை அளித்து ஒவ்வொரு உறுப்பும் சரிவர இயங்க பேருதவியாக உள்ளது.

மேற்கூறிய இந்த செய்கை சரிவர விடாமல் நடைபெறுவதன் மூலம் கிடைக்கும் பயனைப் பற்றி சொல்வது என்பது அவ்வளவு சுலபமான விஷயமில்லை.

நம் முன்னோர்கள் இந்த சந்தியாவந்தனம் மூலமாக நமக்கு கொடுத்துள்ள இந்த வரப்பிரசாதம் ஒரு சடங்காக மட்டுமில்லாமல் ஒரு விஞ்ஞான ரீதியாக செய்யப்படும் புனிதமான செயல் இப்படிப்பட்ட புனிதமான செயலினால் ஒரு சாதாரண மனிதன் அடையும் பலனானது எதற்கும் இணையாகாது.

**<u>சந்தியாவந்தன உரிமை</u>**

நாம் இன்னும் அதுபற்றி புரிந்து கொள்ளாமல் தர்க்கத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தோமேயானால் மேலை நாட்டியிலிருந்து ஒருவர் இதனை விஞ்ஞான பூர்வமாக ஆராயந்து அதற்கு வேறு பெயரினை சூட்டி அதற்க்கான அதிகார உரிமை பத்திரத்தை பெற்று அதன் விலையாக உலகையே விலைபேசலாம்.

**அப்போது சந்தயாவந்தனம் நமது முதல் மூல எண்ணம் என்று சொல்லி கொள்ள இயலாது.**

Original article in English by Dr. Prahlad, Director, DRDO, New Delhi
Translated into Tamil: P. Raghavender, Mumbai
© www.srsmutt.org / www.aradhana2007.com